மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஓர் ஆண்டில் பணியில் இல்லா பட்டதாரிகளுக்காக மூன்று பயிற்சிகளும், எஸ்.எஸ்.எல்.சி. தேறி பணிபுரிபவர்களுக்காக நான்கு பயிற்சிகளும் நந்தனத்தில் உள்ள கோழி வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் கொடுக்கப்படுகின்றன. இதற்கான போதனைக் கட்டணம் ரூ. 10 பயிற்சி முடிவில் தேர்விற்குப் பின் ஒரு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மருத்துவமனை.

*வினா எண் 57—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

தூத்துக்குடி மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தூத்துக்குடி மருத்துவமனையில் 260 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் 1979-80 ல் இம் மருத்துவமனைக்கு எக்ஸ் கதிர் வாங்குவதற்காக ரூ. 1.50 இலட்சம் தொடரும் இனச் செலவுக்காகவும் ரூ. 11,000 தொடரா இனச் செலவுக்காகவும் வரவு செலவுப் பட்டியலில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. ந. தனசேகரன் : தூத்துக்குடி நகரம் விரிவடைந்த நகரமாகப் பெருகி வரும் காரணத்தால் ஒதுக்கப்படுகிற தொகை போதாது என்ற குறைபாடு இருப்பது அரசுக்குத் தெரியுமா? மருத்துவ மனை விஸ்தரிக்கும்திட்டம் ஆய்விலுள்ளது, முடிவடைகின்ற நிலையிலுள்ளது என்று சொல்லும் அமைச்சர் அவர்கள அந்தத் திட்டம் எப்போது முற்றுப்பெறும் என்பதை அறிவிப்பார்களா? அதற்குக் காலவரையறை உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தூத்துக்குடி மருத்துவ மனையின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் 260 படுக்கைகள் கொண்ட விஸ்தரிப்பு வேலைகள் 37.60 இலட்சம் செலவில் மூன்று பிரிவாகக் கட்டுவதற்கு தலைமைப் பொறியாளர் திருத்திய வரை பட மதிப்பீடு அனுப்பியிருந்தார்கள். மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் அதிலே சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவை வரப்பெற்றவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

1980 பிப்ரவரி 5]

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது 1.50 இலட்சம், 37.60 இலட்சம் என்று புள்ளிக்குப் பின்னால் வரக்கூடிய எண்ணிக்கை ஒரு வேளை ஐம்பது லட்சம், அறுபது லட்சம் என்று குறிப்பதுபோல் கூறுகிறார்கள். புள்ளிக்குப் பின்னால் எப்படிப் படிக்க வேண்டுமென்ற முறைப்படி அமைச்சர் அவர்கள் படிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்று புள்ளி ஐந்து சைபர் லட்சம் என்று சொல்ல வேண்டுமென்று பேராசிரியர் சொல்லுகிறார்.

திரு. ந. தனசேகரன் : நான் கேட்க விரும்புவது 260 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை விஸ்தரிப்புத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள்ளாக முற்றுப்பெறும்? குறிப்புகள் திரும்பக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்படி மேலே வருவதும் கீழே போவதுமான முறையை நிறுத்தி உடனடியாக மருத்துவ மனை வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அந்த மருத்துவ மனை விஸ்தரிப்பு அவசியம், தேவைதான் என்பதை உணர்ந்துதான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. திருத்திய மதிப்பீடு வரைபடங்கள் வந்த பிறகு பரிசிலித்து வேலைகள் துவங்க ஆவன செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தூத்துக்குடி மருத்துவ மனை ஆய்வு எப்போது எடுத்துக் கொள்ளப்பட்டது? எவ்வளவு காலமாக ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? ஆய்வு எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : சுமார் 260 படுக்கைகள் கொண்ட பிரிவுக்கு ஆய்வு வரைபட மதிப்பீடு சென்ற ஆண்டு அனுப்பப்பெற்று 37.60 இலட்சம் செலவில் பொறியாளர் வரை படங்கள், மதிப் பீடுகளை அனுப்பியிருக்கிறார். அதன்பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

அரசு மருத்துவமனைகளில் தடுப்பு மருந்துகள் வழங்கல்·

*வினா எண் 58— திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தடுப்பு மருந்துகளான டிரிப்பிள் ஆண்டிஜன், போலியோ சொட்டுமருந்துகள், பிசிஜி போன்றவைகளை எல்லா அரசு மருத்துவ மனைகளிலும் இலவசமாகப் போடும் ஆய்வு ஏதேனும் அரசுக் குறிப்பில் உள்ளதா?